1990 ஆகஸ்ட் 21]

10-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் ஒப்புதலோடு வினா நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. டி. கே. பழனிச்சாமி : நமது ஒப்பற்ற தலைவர் அண்ணன் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் ஜூன் மூன்றாம் தேதி வருகிறது. சினிமாத் துறையைப் புரட்சிகரமாக ஏற்படச் செய்த, பல நடிகர்களை உருவாக்கிய ஒப்பற்ற தலைவர் அண்ணன் கலைஞர் அவர்களின் பிறந்த தினத்தை, குழந்தைகள் தினம், ஆசிரியர்கள் தினம் என்பதைப் போல் கொண்டாட இந்த அரசு முன்வர வேண்டும் என்று அன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பதில் இல்லை)

கைத்தறி ரகங்களுக்குத் தள்ளுபடி

*8027 திரு. ஏ. கணேசமூர்த்தி :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகும் கைத்தறி ரகங்களுக்கு சில்லறை விற்பனைக்கு 20 சதவீதம் தள்ளுபடி வழங்குவது போல் மொத்த விற்பனைக்கும் 20 சதவீதம் தள்ளுபடி வழங்க அரசுக்கு உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் அமுல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.
(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

கால்நடை மருந்தகம் துவக்குதல்.

*6546 திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம், மேலூர் சட்டமன்றத் தொகுதி, திருவாதவூர் மற்றும் வெள்ளளூரில் ஒரு கால்நடை மருந்தகம் துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?